අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

# 2019
# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# ANNUAL REPORT

රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
State Printing Corporation

ஆண்டறிக்கை,
கணக்குக் கூற்றுக்கள் மற்றும்
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2019

# ஆண்டறிக்கை

2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 52 வது ஆண்டுக்கானது.
2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து
2019 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை

## நிறுவனத்தின் நோக்கு

அச்சுத் தொழிலில் முன்னோடியாக திகழ்வதன் மூலம் வெளியீட்டில் அதிலும் குறிப்பாக கல்வி அபிவிருத்தி வெளியீட்டை ஊக்குவித்து பாதுகாப்பதுடன் அப்பியாச புத்தக மற்றும் காகிதம் உட்பட எழுதுவதற்கு தேவையான பொருள்களின் விற்பனை மற்றும் சந்தை ஆகியவற்றில் முன்னோடியாக திகழுதல்.

## பணி

திறமையும் தைரியமும் மிக்க மனநிறைவு கொண்ட ஊழியர்களைக் கொண்ட முன் உதாரணமான அரச கூட்டுத்தாபனமாக திகழ்வதுடன் அச்சுத் தொழிலில் அதி உயர் தரத்திற்கு ஏற்ப போட்டியான விலைக்கு அச்சுப் பொருள் உற்பத்திகளை மக்களின் தேவை மற்றும் நலம் கருதி விநியோகித்தல்.

பானலுவ,
பாதுக்க.

கௌரவ கல்வி அமைச்சர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய
பத்தரமுல்ல

கௌரவ அமைச்சர்,

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, 1, ஜனவரி இலிருந்து 31.12.2019 வரைக்குமான ஆண்டு தொடர்பாக பின்வருவனவற்றை பணிப்பாளர் சபையின் சார்பில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

1. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கை.
2. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, செயலாற்று கணக்குகள் மற்றும் இலாப, நட்ட கணக்கு.
3. கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்துரைகள்.

தங்களின் கவனத்திற்காக முன்வைக்கின்றேன்.

தங்கள் விசுவாசமுள்ள,

**ஜனக ரத்னகுமார**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்



# தலைவரின் செய்தி

**அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2019ம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்காக இந்த செய்தியை வழங்குவதற்கு, ஒரு வருட காலத்தினுள் நிறுவனத்தின் தலைவராகப் பணி புரிந்து நான் பெற்ற அனுபவத்தையும் அந்த வருடத்தினுள் 4 வருடங்களின் பின்னர் மீண்டும் இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றமடைந்ததையும் எனது பாக்கியமாகக் கருதுகின்றேன்.**

1968 இல. 24 சட்டத்தின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனமானது கடந்த 53 வருடங்களாக பல சவால்களுக்கு மத்தியில் தற்போதைய முன்னேற்றத்தை நோக்கிப் பயணித்துள்ளது.

கடந்த 5 வருட காலத்தை நோக்குகையில் 2016ம் ஆண்டிலிருந்து 2019ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 900 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நட்டத்தைக் கொண்டிருந்த சவாலான சந்தர்ப்பத்தில் 2020.01.01 தினத்தில் நான் இந்தக் கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பதவி ஏற்றுக் கொண்டேன்.

அந்த நிலை அவ்வாறு இருக்கையில், தற்போதைய ஜனாதிபதி அதி மேதகு கோத்தாபய ராஜபக்ஷ அவர்களின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு இணங்க சேவையில் ஈடுபட்டு 2020ம் ஆண்டினுள் 22 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான இலாபத்தை ஈட்டிக் கொண்டு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் மீண்டும் சுபீட்சமான பயணத்தை அடைவதற்கு என்னால் இயலுமாக அமைந்தது தொடர்பாக நான் மிகுந்த சந்தோஷம் அடைகின்றேன்.

மேலும் 2020ம் ஆண்டுஅரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் வரலாற்றில் அதிக வருமானத்தை ஈட்டிய வருடமாக, அதாவது 1800 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானத்தை ஈட்டியதனூடாக உறுதி செய்யப்பட்டது.

இது அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் எதிர்காலத்தை நிலைபேறான அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கான அறிகுறியாக அமைவது சந்தேகத்திற்கு இடமில்லாதது.

2020ம் ஆண்டினுள், மேலே குறிப்பிட்டுக் காட்டியபடி நிதியியல் ரீதியாக இலாபம் ஈட்டிய அரசாங்க நிறுவனமாக ஆக்கியமைக்கும் வரலாற்றில் அதிக வருமானத்தை ஈட்டியமைக்கும் அதி மேதகு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ அவர்களின் நோக்கும் கௌரவ பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆசீர்வாதமும் மற்றும் ஆதரவு வழங்கிய கௌரவ கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அவர்களின் ஆதரவும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா அவர்களின் ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இந்த வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தன.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் எதிர்வரும் நான்கு வருட காலத்தினுள் அரச புலத்தில் தொடர்ந்து கொண்டு இலாபம் ஈட்டும் நிறுவனமாக ஆக்கிக் கொண்டு அதன் உறுப்பினர்களின் மனித வினைத்திறனை விருத்தி செய்வது எனது முதன்மையான இலக்காக அமைவதுடன்,சர்வதேச ரீதியிலான தர நியமங்களை அடைவதும் சூழலுக்குத் தீங்கு இல்லாத வகையில் எமது தொழிற்சாலையை பச்சைய தொழிற்சாலையாக மாற்றம் செய்வதும் புதுப்பிக்கப்படக் கூடிய சக்தியின் மூலம் மின்சாரத்தைப் பெற்று பூச்சியக் காபன் தொழிற்றுறையாக மாற்றம் செய்வதும் எதிர்வரும் இரண்டு வருட காலத்திற்கான எனது மூலோபாயத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பத்து ஆண்டுகளில் அச்சுத் துறையில் முதன்மையானவர்களாக மேலோங்கி நின்று சந்தைத் தேவைகளை வழங்குவது எங்கள் முன் உள்ள பிரதான சவாலாகும். அந்த சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுத்து அவற்றை வெற்றி கொள்வதற்காக எதிர்காலத்திற்குப் பொருத்தமான வகையில் நவீன இயந்திர உபகரணங்களை, அதாவது பாதுகாப்பு அச்சு இயந்திரம், புதிய வகை புத்தகம் அச்சிடும் இயந்திரம் மற்றும் அதி நவீன நான்கு வர்ண இயந்திரம் ஆகியவற்றை இந்த வருடத்தினுள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்ததும் சர்வதேசத் தர நியமமான ISO-9001-2015 மற்றும் ISO-14051-2011 ஆகிய தர நியமங்களை எமது நிறுவனத்தினுள் தாபிக்கக் கூடியதாக அமைந்ததனூடாக மேற்கூறப்பட்ட சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பது தொடர்பாக அவசியமான பின்னணியை வடிவமைப்பு செய்வதற்கு இயலுமாக அமைந்தது தலைவர் என்ற வகையில் நான் பெற்றுக் கொண்ட பாக்கியமாகக் கருதுகின்றேன்.

நவீன உலகத்திற்கு ஏற்ற வகையில் நிறுவனத்தினுள் புதிய வியாபார அபிவிருத்தி வாய்ப்பாக டிஜிட்டல் அச்சு இயந்திரத்தை நிறுவுதல், SPC டிஜிட்டல் விசுவாச (லோயல்டி) அட்டையை அறிமுகம் செய்தல் மற்றும் SPC டிஜிட்டல் என்ற பெயரில் App ஒன்றை அறிமுகம் செய்வதனூடாக Smart Outlet எண்ணக்கருவை அறிமுகம் செய்தல் அச்சுத் துறைக்கு அப்பால் சென்று புதிய பரிமாணம் ஒன்றில் நிறுவனத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது நிறுவனத்தின் எதிர்காலத்திற்காக மேற்கொள்ளப்படும் முதலீடு என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது.

இந்த ஒன்றரை வருட காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்திச் செயற்பாடு மூலம் நிறுவனத்தினுள் உற்பத்தி செய்யப்படும் பாடசாலைப் பாடப் புத்தகங்களின் உற்பத்தியின் செயற்றிறனும் வினைத்திறனும் அதிகரித்தமையானது நாம் அடைந்த வெற்றி என்பதுடன், லொத்தர் சீட்டு அச்சிடலுக்கு மேலதிகமாக பாதுகாப்பு அச்சு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் தேசிய மற்றும் சர்வதேசத் தேவைகளுக்கு அவசியமான பாதுகாப்பு அச்சிடல் மேற்கொள்ளும் புதிய தொழிற்சாலையை உருவாக்கியமை மற்றும் டிஜிட்டல் அச்சிடல் மூலமும் நான்கு வர்ண அச்சிடல் மூலமும் புதிதாக ஏற்படும் பொருளாதார நன்மைகளை எதிர்காலத்தில் நிறுவனத்திற்குக் கிடைப்பதற்கு திட்டமிடுவதற்கு இயன்றமை தொடர்பாக தலைவர் என்ற வகையில் நான் பெருமகிழ்வடைவதுடன், உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களும் நிறுவனத்தின் எதிர்கால அபிவிருத்திக்காக ஒன்றாகப் பணி புரிய வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**ஜனக ரத்னகுமார**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2019
# பணிப்பாளர் சபை

**தலைவர்**

திரு. எச். ஹேவகே (2019.01.25 - 2019.03.28

திரு. ஆர். எம். எம். ரத்நாயக்க (2019.12.04 - 2019.03.28)

திரு. பினர ஜயவர்தன (2019.03.29 - 2019.12.03)

**வேலை பணிப்பாளர்**

திரு. மஹிந்த புஷ்பகுமார (2019.02.12 - 2019.12.03)

**பணிப்பாளர்கள்**

1. திரு. குமுது மீகலகே
2. திரு. ஜயந்த விக்கிரமனாயக்க
3. திரு. விஜித நந்தகுமார
4. திரு. டபிளிவ். ஏ. விஜயானந்த
5. திரு. ரோஹன ரத்நாயக்க

# 2019

## நிறைவேற்று அதிகாரிகள்

**பொது முகாமையாளர்**
திரு. ஆர். எம். என். மொனறவில

**நிதி முகாமையாளர்**
திரு. என். டி. பிரியங்கர குமார

**பிரதி வேலை பொது முகாமையாளர்**
திரு. எஸ். டீ. கருணாரத்ன

**விநியோக முகாமையாளர்**
திரு. ஈ. வீ. கே. கீர்த்திரத்ன

**முகாமையாளர்**
**(நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. கே. பீ. டீ. என். தேவப்பிரிய

**சந்தைப்படுத்தல் முகாமையாளர்**
திரு. எம். டீ. ஜே. பெரேரா

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். எம். பீ. திசாநாயக்க

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. டீ. எம். ஆர். என். தென்னகோன்

**பிரதி நிதி முகாமையாளர்**
திரு. கே. எச். திலகரத்ன

**முகாமையாளர் (காகிதாதிகள் தொழிற்சாலை)**
திரு. எல். டீ. பிரேமசிறி

**கணக்காளர்**
திரு. எம். ஆர். பீ. ஜயவர்தன

**கணக்காளர்**
திரு. டப். எல். தெனியகே

**உள்ளக கணக்காய்வாளர்**
திரு. எம். எஸ். எஸ். மொஹொட்டி

**உதவி வேலை முகாமையாளர் (மதிப்பீடு)**
திரு. கே. டீ. டீ. சந்திரசிறி

**உதவி வேலை முகாமையாளர்**
**(பாதுகாப்பு அச்சிடல் பிரிவு)**
திரு. எம். ஏ. கொதலாவல

**உதவி வேலை முகாமையாளர் (செயற்பாடு)**
திரு. எஸ். டீ. குமாரசிங்க

**உதவி வேலை முகாமையாளர்**
**(புத்தகம் கட்டுதல்)**
திரு. எம். ஏ. சாந்த குமார

**உதவி வேலை முகாமையாளர் (லிதோ)**
திரு. பீ. கே. திலக் மஹிந்த

**உதவி முகாமையாளர் (விற்பனை)**
திரு. எச். ஆர். குணசேகர

**உதவி முகாமையாளர் (பாதுகாப்பு)**
திரு. டப். டப். எம். ஆரச்சிகே

**உதவி முகாமையாளர்**
**(நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திரு. கே. எச். பீ. சஜீவ

**உதவி முகாமையாளர்**
**(சட்டம் பணிப்பாளர் சபையின் செயலாளர்)**
திரு. ஏ. எல். ஆர். மதுகாணி

**உதவி முகாமையாளர் (வெளியீடு)**
திரு. மதுரங்க சீ. நுவன்ப்பிரிய

**உதவி முகாமையாளர் (வழங்கல்)**
திரு. யூ. அனில் ஜயகாந்த

**கணக்காளர்**
திரு. டப். ஏ. ஏ. எஸ். ஜயசுன்தர

**உதவி வேலை முகாமையாளர் (பராமரிப்பு)**
திரு. என். ஜீ. எல். சன்திமால்

# 2019

## பணிப்பாளர் சபையின் அறிக்கை

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவுன்படி, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 31. 12. 2019 இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய 50 ஆவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

மதிப்பீட்டு ஆண்டில் 12 சபைக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 01. உற்பத்தி


### 1.1 பாடசாலை பாட நூல்கள்


### 1.1.1 பாடசாலை நூல்களை அச்சிடுதல்

பாடசாலைப் பாடப்புத்தகங்களை அச்சிடும் நோக்கில் நிறுவப்பட்ட கூட்டுத்தாபனம் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து வேறு உற்பத்திப் பிரிவுகளை நோக்கி விரிவடைந்துள்ளது. அத்துடன் பாடசாலைப் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி நேரடியாக கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு பதிலாக கேள்விப் பத்திரங்கள் ஊடாகப் போட்டி அடிப்படையில் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் கட்டளைகளைக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது. எனினும் இம்முறைமை மாற்றப்பட்டு 2019 ஆண்டிலும் கேள்விப் பத்திர நடைமுறைக்கு புறம்பாக பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி கூட்டுத்தாபனத்திற்கு அளிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. இதற்கு அமைவாக 2019 ஆண்டிலும் 11.012 மில்லியன் பாடசாலைப் பாடப்புத்தங்களின் பிரதிகளை அச்சிட்டதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு 1090.416 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது.

பகுப்பாய்வு ஆண்டில் அச்சிடப்பட்ட பாடசாலை பாடப்புத்தகங்களின் பிரதிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானம் 2017 மற்றும் 2018 க்கு ஒப்பீட்டு அடிப்படையில் பின்வருமாறு

| பாடசாலை அச்சு வேலை | 2017 ('000) | 2018 ('000) | 2019 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 7,981 | 4,485 | 11,012 |
| வருமானம் - ரூபா | 676,391 | 428,627 | 1090,416 |




### 1.2 ஏனைய அச்சு சேவைகள்


பகுப்பாய்வு ஆண்டில் அறநெறி பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடல் சேவைகள் (அதிஷ்ட இலாபச்சீட்டுகள், ரிதிரேகா, வங்கி சேமிப்பு சான்றிதழ் பத்திரங்கள், தபால் வைப்பு புத்தங்கள், லேபல்கள், எயார்போர்ட் சுப்பர் டிரோ முதலியன) மற்றும் அரச நிறுவனங்களுக்கான அச்சிடல் சேவைகள் வழங்கப்பட்டன. இதனைத் தவிர வெவ்வேறு நிறுவனங்களின் அச்சுப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. விஷேட அச்சிடல் சேவைகள் சில கீழ்வருமாறு.

### 1.2.1 பாதுகாப்பு அச்சிடும் பணி

தேசிய லொத்தர் சபைச் சபைக்காக மஹஜன சம்பத இற்றைவரை 45 ஆண்டுகள் அச்சிடப்பட்டுள்ளது. இதனைத் தவிர எயார்போர்ட் லொத்தரும் அச்சிடப்பட்டுள்ளது. லொத்தர் சபைச் சபையிடமிருந்து கிடைத்த சகல அச்சிடல் கட்டளைகளும் அச்சிடப்பட்டதுடன், 2019 ஆண்டில் அச்சிடப்பட்ட லொத்தர்களின் எண்ணிக்கை 524.05 மில்லியனாகும். இதற்கு அமைவாக வருமானம் 293.720 மில்லியன் ரூபாவாகும். லொத்தர் அச்சிடலின் வருமானமும் பிரதிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.


| லொத்தர் அச்சிடுதல் வேலை | 2017 ('000) | 2018 ('000) | 2019 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 399,739 | 427,415 | 524,474 |
| வருமானம் - ரூபா | 233,947 | 248,011 | 293,440 |

லொத்தர் அச்சிடுதல்




லொத்தர் சீட்டுக்களின் தொகை

லொத்தர் அச்சிடுதல்




லொத்தர் அச்சிடுதலில் இருந்து கிடைத்த வருமானம்

### 1.2.2 வேறு அச்சு சேவைகள்

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை போன்று தனியார்துறையின் கட்டளைகளை பெற்றுக்கொள்வது குறித்து விசேட ஆர்வத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட விசேட அச்சிடல் சேவைகளில் பின்வரும் சேவைகள் முக்கியமானவையாக காணப்பட்டன.

01. பல நிறுவனங்களுக்கான ஆண்டறிக்கைகள்
02. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கான பல்வகை அச்சுப் பணிகள்
03. பல்கலைக்கழக சான்றிதழ் பத்திரங்கள்
04. தேசிய மிருககாட்சிசாலைக்கான நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய விளம்பர கையேடுகள்
05. சினிமா டிக்கட்டுக்கள்
06. ஊழியர் சேமலாப நிதியத்தின் பல்வகை அச்சுப் பணிகள்
07. தேசிய சேமிப்பு வங்கயின் அச்சுப் பணிகள்
08. பரீட்சைத் திணைக்களத்திற்காக அச்சிடப்பட்ட விடை எழுதும் தாள் புத்தங்கள்
09. அறநெறி பாடசாலை புத்தகங்கள் அச்சிடல்

பல்வகை அச்சுப் பணிகளை நிறைவேற்றி கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானம் ரூ. 183 மில்லியனாகும்.

## 1.3 அப்பியாசக் கொப்பிகளையும் ஏனைய காகிதாதிகளையும் தயாரித்தல்

பகுப்பாய்வு ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆண்டின் உற்பத்தி பின்வருமாறு.


| விபரம் | உற்பத்தி அளவு | பெறுமதி ரூபா |
|---|---|---|
| அப்பியாசக் கொப்பிகள் (80 பக்கம்) | மில்லியன் 5.267 | மில்லியன் 150,720 |
| CR கொப்பிகள் | மில்லியன் 0.371 | மில்லியன் 22,992 |
| ஏனைய காகிதாதிகள் | மில்லியன் 0.128 | மில்லியன் 13,313 |
| மொத்தம் | மில்லியன் 5.766 | மில்லியன் 187,035 |

மதிப்பீட்டு ஆண்டில் உற்பத்தியும் 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளி விபரங்கள்

| அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதியும் | 2017 ரூ. ('000) | 2018 ரூ. ('000) | 2019 ரூ. ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 10,785 | 7,220 | 5,766 |
| வருமானம் - ரூபா | 279,680 | 238,333 | 187,035 |


8-7-2019 இருந்து 19-07-2020 வரை (11 நான்) மற்றும் 16-09-2020 இருந்து 13-11-2020 வரை (58 நாள்) காலத்தில் எழுதும் தாள்கள் தொகை கிடைக்காமையினால் 2019 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியவில்லை.

அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதிகளும




பிரதிகள் தொகை

அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதிகளும்




பாடப்புத்தகங்கள், ஏனைய அப்பியாச புத்தகங்களிலிருந்து கிடைத்த வருமானம்

## 02. விற்பனை/சந்தைப்படுத்தல்


2018ஆண்டில் மொத்த சந்தைப்படுத்தல் வருமானம் சிறியளவில் குறைவடைந்தது.

| வருடம் | 2017 ரூபா | 2018 ரூபா | 2019 ரூபா |
|---|---|---|---|
| மொத்த வருமானம் (வரி உட்பட) | 286,849,475.00 | 282,021,852.00 | 153,082,388.79 |

2017 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆண்டில் அப்பியாசக் கொப்பிகள் வருமானத்தின் குறையும் சதவீதம் 2019 ஆண்டின் குறைவடையும் சதவீதமான 1.89% அளவு 2019 ஆண்டில் 45.71% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. வருமானம் குறைவடைவதற்கு பிரதான காரணியான 2019 ஆண்டில் புத்தக உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள் விநியோக பற்றாக்குறையால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

அதனைத் தவிர வெளி நிறுவனங்கள் ஊடாக கொள்வனவு செய்து மீண்டும் விற்பனை செய்வதற்கு பயன்படுத்தப்படும் எழுதுபொருட்களை 2019 ஆண்டில் எதிர்பார்த்தவாறு பெற்றுக்கொள்ள முடியாமையினால் எதிர்பார்த்த வருமானம் குறைவடைந்தது.

விற்பனை சந்தைப்படுத்தல்




மொத்த விற்பனை பெறுமதி

கூட்டுத்தாபனம் மற்றும் வெளிப்புற எழுதுபொருட்கள் எதிர்பார்த்தவாறு நிறைவு செய்ய முடிந்திருந்தால் இவ்வாண்டில் வருமானத்தை மேலும் 15% இடையிலான அளவில் அதிகரிக்க முடிந்திருக்கும்.

### வெளியீட்டுச் சேவை

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டு வெளியீட்டு இலாபம் குறைவாக காணப்பட்டது. முன் ஆண்டில் வேறு வெளியீடுகளை வெளியிட முன்னுரிமை வழங்கப்பட்டதோடு கணிப்பீட்டு ஆண்டின் அதில் பின் தங்கிய நிலையிருந்தது. இந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் எந்தவொரு வெளியீடும் வெளியிடப்படவில்லை.

| | |
|---|---|
| 2019 வெளியிடப்பட்ட புதிய நூல்களின் எண்ணிக்கை | 00 |
| 2017 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | மில்லியன் 3.2 |
| 2018 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | மில்லியன் 5.2 |
| 2019 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | மில்லியன் 2.3 |

## 03. நிலையான சொத்துக்கள்

2019 ஆண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் நிலையான வைப்புக்களின் மொத்த கிரயம் ரூ.1,168,709,786/-. அதன் தேறிய பெறுமதி ரூ.991,125,221/- ஆகும். இந்நிலைமை இதற்கு முந்திய வருடமான 2018 ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ.1,148,392,769/- மற்றும் ரூ.1,039,094,309/- ஆக காணப்பட்டது.

| நிலையான சொத்துக்கள் | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) |
|---|---|---|---|
| திறந்த பெறுமதி (செலவினத்தில்) | 872,653 | 1,148,393 | 1,168,709 |
| வருட முடிவில் சரியான பெறுமதி | 1,093,382 | 1,039,094 | 991,125 |

## 04. வரி பொறுப்பு


கூட்டுத்தாபன மதிப்பீட்டு ஆண்டுக்கான 2019/2020 வருமான வரி, பங்கிலாப வரியாக ஏதேனுமொரு தொகை கூட்டுத்தாபனத்தின் 2019 ஆண்டிறுதி கணக்குகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்படவில்லை.
(கூட்டுத்தாபனம் நட்ட நிலைமை தொடர்ந்நன் காரணமாக)

| வரி பொறுப்பு | 2017 ரூ. ('000) | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) |
|---|---|---|---|
| வருமான வரி | - | - | - |
| பங்குலாப வரி | - | - | - |
| மொத்தம் | - | - | - |

## 05. இலாபம்

2019ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூ. 169,428,397/- வரிக்கு முந்திய இலாபத்தை ஈட்டியுள்ளதுடன், 2018 ஆண்டில் ரூ. 406,986,259/- நட்டமடைந்தது.


| இலாபம் | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) |
|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | (243,094) | (406,985) | (169,428) |
| வரி செலுத்திய பின்னர் | (243,094) | (406,985) | (169,428) |



## 06. போனஸ்

2018 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனம் 409 மில்லியன் நட்டமடைந்ததுடன் வழமைபோல் இரண்டு மாத சம்பளம் சாதாரன ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட முடியவில்லை அத்துடன் எந்தவொரு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. ஆனாலும் 2019 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இலாபம் மிக வேகமாக அதிகரிக்கையில் நட்டம் 409 மில்லியம் இருந்து 169 மில்லியம் வரை குறைக்க முடிந்தது. ஊழியர்களின் முயற்சிக்காக ஊழியரின் ஒரு சம்பளத்துக்கு சமனான பணம் ரூபா 22 மில்லியன் ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

| போனஸ் | 2017 ரூ. ('000) | 2018 ரூ. ('000) | 2019 ரூ. ('000) |
|---|---|---|---|
| | 50,191 | 1,408 | 22,097 |




## 07. சேமநலன்

பின்வரும் நலன்புரிச் சேவைகள் மற்றும் வசதிகள் கடந்த ஆண்டு அடிப்படையில் இவ்வாண்டிலும் செலுத்தப்பட்டது. இதற்காக கூட்டுத்தாபனம் செலவிட்ட மொத்த தொகை ரூ. 98 மில்லியனாகும்.

| | சேமநலன் | 2017 ரூ.('000) | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) |
|---|---|---|---|---|
| 01. | ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் | 11,012 | 10,879 | 8,503 |
| 02. | ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு | 6,020 | 5,263 | 4,784 |
| 03. | மருத்துவ வசதிகள் | 10,612 | 10,046 | 9,431 |
| 04. | பல்வேறு சேமநல வசதிகள் | 24,924 | 24,204 | 21,171 |
| 05. | ஊழியர் இழப்பீட்டு காப்புறுதி | - | - | - |
| 06. | சகல ஊழியர்களுக்கும் காகிதாதிகளுக்கான கொடை வவுச்சர்கள் | 1,685 | 1,703 | 1,378 |
| 07. | ஊழியர்களுக்கான போனஸ் | 50,191 | 1,408 | 22,097 |
| 08. | ஊழியர்களின் வீடமைப்பு கடன் வட்டியை மீளளித்தல் | 3,114 | 2,573 | 2,087 |
| 09. | பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவு | 15,607 | 13,615 | 13,210 |
| 10. | விசேட கொடுப்பனவு | 7,490 | - | 15,675 |
| | **மொத்தம்** | **130,657** | **69,748** | **98,336** |

## 08. ஆளணி

2019.12.31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 599 ஆகும்.

| **ஊழியர் எண்ணிக்கை** | **2019** |
|---|---|
| அலுவலகம் | 139 |
| பிரதான தொழிற்சாலை | 314 |
| காகிதாதி தொழிற்சாலை | 60 |
| பாதுகாப்பு பிரிவு | 42 |
| விற்பனை நிலையங்கள் | 44 |
| **மொத்த ஊழியர் தொகை** | **599** |

**2019 ம் ஆண்டில் சேவைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள்**

2019 ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்கு உத்தியோகத்தர் மட்டத்திலான ஊழியர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

**2019 ஆண்டில் சேவையில் இருந்து விலகிய நிறைவேற்று அதிகாரிகள்**

| | **பெயர் / பதவி** | **திகதி** |
|---|---|---|
| 1. | திரு. ஆர். எம். என். மொனறவில<br>– பொது முகாமையாளர் | 2019.08.22 |
| 2. | திரு. டப். எல். தெனியகே<br>– கணக்காளர் | 2019.10.09 |
| 3. | திரு. என். டி. பிரியங்கர குமார<br>– நிதி முகாமையாளர் | 2019.10.10 |

## முடிவு

கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களும் கூட்டுத்தாபனத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை தந்தமைக்காக தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகிறார்கள்.

வெற்றிகரமான திட்டத்திற்கு வழிகாட்டுதலும் ஆதரவும் அளித்த கௌரவ கல்வி அமைச்சருக்கும் திட்டத்தை அமுல் செய்வதில் தொடர்ச்சியான ஆதரவை தந்த அமைச்சின் செயலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகின்றார்கள்.

எதிர்வரும் ஆண்டுகளில் இதே ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று முகாமைத்துவம் நம்புகிறது.

**ஜனக ரத்னகுமார**
தலைவர்

# 2019

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2019 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 1. கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்

#### 1.1 பொதுத் தகவல்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1968 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டது. இது பாதுக்க, பானலுவவில் அமைந்துள்ளது.

#### 1.2 முக்கிய செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகளாக பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுதல், பயிற்சிக் கொப்பிகளை தயாரித்தல் மற்றும் ஏனைய அச்சுப் பணிகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

### 2. தயாரிப்பின் அடிப்படை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணைவாக LKAS மற்றும் SLFRS என்பவற்றிற்கு ஏற்ப நிதி நிலைமை கூற்றுக்கள், விரிவான வருமான கூற்று, நிதி மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.1 மதிப்பீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் திரட்டல் முறை மற்றும் தொன்மை கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

#### 2.2 மதிப்பீட்டு அடிப்படை

கீழ்தரப்பட்ட குறிப்புக்கள் தவிர்ந்து நிதி கூற்றுக்கள் சீர்செய்யப்பட்டிருப்பது தொன்மை கிரய அடிப்படையிலாகும்.

* விரிவுபடுத்தப்பட்ட வருமானக் கூற்றின் குறிப்பிடப்பட்ட வட்டி வருமானம்.
* கணக்கிடப்பட்ட சொத்துக்களின் மீள் பெறுமதி

#### 2.3 தொடர்ச்சியாக இயங்குதல்

கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்வதற்கான ஆற்றல் சம்பந்தமாக பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை மேற்கொண்டு கவனம் செலுத்தப்பட்டது. எவ்வாறிருந்தாலும் அதனை முடியுறுத்துவதோ அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதோ சபையின் நோக்கமல்ல.

#### 2.4 பாவணையுள்ள காசு

இறுதியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது பாவணையிலுள்ள இலங்கை ரூபாவிலாகும். அனைத்து நிதி கூற்றுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளது இலங்கை ரூபா பெறுமதி அடிப்படையிலாகும். கிட்டிய ரூபா பெறுமதி காட்டப்பட்டுள்ளது.

#### 2.5 கூட்டுத்தாபனத்தினால் முன்னைய

ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த கணக்கீட்டு கொள்கைகள் மாறுபடாது அதன் வடிவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவையான சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டுகளின் பெறுமதி மற்றும் குறிப்புக்கள் மீள் தயாரிப்பு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டுகளின் பிழை திருத்தப்பட்டு சரி செய்யப்பட்ட நடைமுறையாண்டின் நிதிகூற்று மீள் வெளியிடப்பட்டது.

## 3. சிறப்பான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

கீழ் தரப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளில் அனைத்து காலகட்டத்துக்கும் உரிய அடிப்படையிலும் தொடர்ச்சியாக கூட்டுத்தாபனத்தினால் நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3.1 சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள்

சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள் தேய்மான சேர்க்கப்பட்ட தேறிய கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் பாவனையில் உள்ளன.

கீழ் தரப்பட்ட திகதிகளில் மதிப்பீட்டு திணைக்களத்தினால் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| காணி மற்றும் அலுவலக | - | 02.01.2017 இருந்து 06.01.2017 வரை |
| உபகரணம்<br>தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்<br>கணனி உதிரிப்பாகங்கள் | - | 02.01.2017 இருந்து 30.01.2017 வரை |
| இயந்திராதிகள் | - | 16.01.2017 இருந்து 30.01.2017 வரை |
| மோட்டார் போக்குவரத்து | - | 13.01.2016 இருந்து 14.01.2016 வரை |

நிறுவனத்தின் நிதி நிலைமைகளை கருத்தில் கொள்ளும் போது SLAS இல் பரிந்துரைக்கப்பட்டபடி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்களை மறு மதிப்பீடு செய்ய முடியாது.

#### 3.1.1 தேய்மானம்

மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்தகு ஆயுட்காலம் மீது நேரடி தேய்மான அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும்.

நிகழ் மற்றும் ஒப்பீட்டு ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் |
| பொறிகளும் இயந்திரங்களும் | 13.33 வருடங்கள் |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 04 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 03 வருடங்கள் |

### 3.2 பொருட் பட்டியல்

பொருட்பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் தேறிய அட்டுறு பெறுமதியில் கணிப்பிடப்பட்டுள்ளது.

### 3.3 வரிவிதிப்பு

#### 3.3.1 வரி

நடப்பு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீட்டு வருமான வரி செலுத்தல் மற்றும் சொத்து தேசிய வருமான ஆணையாளர் இற்கு சொலுத்துவதற்கு மற்றும் பெற்றுக் கொள்ளலுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வருமான வரி கணக்கீடு செய்யும் போது நிதி கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அங்கிகாரமளிக்கபட்ட வரி வீதம் மற்றும் அன்றைய தின சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயற்படுத்தப்படும். வருமான வரி வேறுபடுத்தப்படும் போது நிதிகூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவு வரவு செலவு அடிப்படையில் 2006 வருடத்தில் தேசிய வருமான ஆண்டறிக்கையின் 10 ஆவது பிரிவின் அடிப்படையில் மற்றும் அதன் பின் மேற்கொண்ட திருத்தங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.4 காசும் காசுக்கு சமமானவைகளும்

கையிருப்பிலுள்ள காசு நடைமுறைக் காசு மற்றும் வங்கியிலுள்ள காசு, காசு மற்றும் காசுக்கு சமனானவைகளும் குறிக்கப்படும். நிதி அமைப்பு கூற்றில் வங்கி பற்று மற்றும் வங்கி மீதிக்கு அதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக கருதப்படும். காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் குறுகிய கால பணத்தேவை மற்றும் வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு அதிக திரவத்தன்மையுடையதாக கருதப்படும்.

# 4. நிதி கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் தொடர்ச்சியான அளவீடு

## 4.1 நிதிச் சொத்துக்கள்

### 4.1.1 வியாபார கடன்பட்டோர்

வியாபார கடன்பட்டோர் சாதாரண பெறுமதியில் நிதிக்கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

## 4.2 நிதி பொறுப்புக்கள்

### 4.2.1 சொத்துக்கள் ஈடு வைத்தல்

சகல வங்கி வசதிகள், வங்கி மிகைப்பற்று, குறுகிய கால கடன், நீண்ட கால கடன், கடன்பொறுப்பு, வங்கி பிணையாட்களுக்காக மக்கள் வங்கி இலக்கம் MB - 979/3063/3243/1147/422/5789 அதற்குரிய கூட்டுத்தாபன காணி கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் ஈடுவைத்துள்ளது.

இதற்கு மேலாக திறைசேரி பிணையாளர் ஒருவர் 2018. 09. 07 ஆம் திகதி இலக்கம் : TO/REV/TG/522 கீழ் கீழுள்ள வேலைத்திட்டத்துக்காக மக்கள் வங்கியின் மூலம் கடன் வசதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

| வேலைத்திட்டத்தின் பெயர் | பாதுகாப்பு நிதி (ரூ) | முடிவுத் திகதி |
|---|---|---|
| வங்கி மிகைப்பற்று, கடன் பொறுப்பு மற்றும் பொறுப்பு வசதிகளுக்காக | 1,165 மில்லியன் | 15.09.2021 |
| திருத்த வேலை மற்றும் செயற்பாட்டு அபிவிருத்திக்காக நிதி ஒதுக்குதல் | 185 மில்லியன் | 15.09.2023 |

### 4.2.2 ஐயப்பாட்டு பொறுப்பு

அனைத்து மூலதனம் பகிர்வு மற்றும் ஐயப்பாட்டு நிதி கூற்றுக்களில் தேவையான சரிபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் மூலம் அச்சிடப்படுகின்ற பாடசாலை பாடநூல்கள், அறநெறி பாடசாலை பாடநூல்கள், மற்றும் லொத்தர் சீட்டு அச்சிடல் மற்றும் பகிர்வு கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பௌத்த விவகார திணைக்களம் மற்றும் தேசிய லொத்தர் சபைக்கு வங்கி உத்தரவாதம் மற்றும் முற்பணம் செலுத்தல் சமர்ப்பிக்கப்பட்டது. ஐயப்பாட்டு பொறுப்பு மொத்த தொகை 130,695,700 ஆவதுடன் 2019.12.31 திகதிக்கு திறக்கப்பட்டுள்ள கடன் உத்தரவாத பெறுமதி 67,889,175 ஆகும்.

### 4.3.1 கையிருப்பு

கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம், பொதுவான கையிருப்பு மற்றும் அபிவிருத்தி கையிருப்பு உள்ளடங்கலாக அரசாங்கத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஆரம்ப கையிருப்பு | ரூபா | 102,490.50 |
| அபிவிருத்தி கையிருப்பு | ரூபா | 13,901,142.23 |
| பொது கையிருப்பு | ரூபா | 1,000,000.00 |
| | ரூபா | **15,003,632.73** |

கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை நிலையான மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.

### 4.3.2 மீள்மதிப்பீடு இருப்பு

இந்த இருப்புக்கு 2016 ஆண்டில் மோட்டார் வாகனம் மீள்மதிப்பீடு செய்வதில் பெற்றுக் கொண்ட இலாபம் மற்றும் கீழ்தரப்பட்டுள்ள படி உபகரணங்கள் மற்றும் மீள்மதிப்பீடு செய்த இலாபங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன.

| | 2016 (ரூ.) | 2017/18 (ரூ.) |
|---|---|---|
| மோட்டார் வாகனம் மற்றும் வேறு வாகனங்கள் | 36,015,363 | |
| சொத்துக்கள் | | 377,290,608 |
| கட்டிடங்கள் | | 158,049,568 |
| பொறிகளும் இயந்திரங்களும் | | 246,979,194 |
| காரியாலய உபகரணங்கள் | | (8,785,874) |
| கணணி மற்றும் உதிரிப்பாகங்கள் | | (1,537,152) |
| | **36,015,363** | **771,996,344** |

## 5. ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

### 5.1 ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

1983 இல 12 ஒய்வு பயன் பொறுப்புறுதிகள் சுற்று நிருபனத்தின் கீழ் ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பொறுப்புடையதாகும் இதுவரைக்கும் உரிய நேரத்தில் இதனை செலுத்தியுள்ளதுடன் 2019.12.31 திகக்கு ஓய்வு பயன் பொறுப்பு ஒதுக்கப்படுவதற்கு இது தொடர்பான நிதி அமைப்பொன்று காணப்படவில்லை.

### 5.2 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி

ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி யின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக சேவை வழங்குனர் உரிய நிதிக்கு 12% மற்றும் 3% என்று அடிப்படையில் அடிப்படை சம்பளத்தை கருத்திற் கொண்டு செலுத்தல் வேண்டும்.

## 6. வருமானமும் செலவினங்களும்

### 6.1 வருமான இனங்காணல்

சகல வருமானமும் தொன்மை கிரய அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**வட்டி வருமானம்**

கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 10% வட்டி அறவிடப்பட்டுள்ளது.

### 6.2 செலவுகளை இணங்காணல்

**வரவு செலவு**

கூட்டுத்தாபனத்தை நடத்திச் செல்வதற்கு சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் செயற் திறன்பிக்கதாக பநாமரிப்பு செய்வதற்கான அரைத்து செலவினங்கள் வருடத்தினுள் வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவு**

கூட்டுத்தாபத்தின் சொத்து மற்றும் உபகரணங்கள் வருமான அளவை விருத்தி செய்வது மற்றும் முன்ளோக்கி கொண்டு செல்வதற்காக சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளல் மற்றும் நீடித்தல் மற்றும்.

### 6.3 கடன் பெறுவதற்கான கிரயம்

ஏற்கப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட சகல கடன் பெறுவதற்கான கிரயங்களும் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்றவற்றை செயற்படுத்துவதற்குரியதும், இதற்குரிய வட்டி செலவினங்களையும் மதிப்பிட்டுள்ளது.

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | ரூ. | ரூ. |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் | 15 | 991,125,221 | 1,039,094,309 |
| வேறுபட்ட வரி பொறுப்புக்கள் | 16 | 17,105,398 | 11,566,933 |
| | | **1,008,230,619** | **1,050,661,242** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | |
| பொருட்பட்டியல்கள் | 17 | 275,133,678 | 438,499,410 |
| வியாபார வருமதிகள் | 18 | 393,268,112 | 299,687,983 |
| ஏனைய வருமதிகள் | 19 | 28,942,689 | 46,143,558 |
| முற்பண கொடுப்பனவு | | 386,775 | 235,476 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 20 | 31,459,352 | 34,940,656 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 729,190,607 | 819,507,084 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,737,421,226** | **1,870,168,326** |
| **ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 15,000,000 | 15,000,000 |
| ஒதுக்கங்கள் | | 15,003,633 | 15,003,633 |
| இருப்பு வருமானங்கள் | | (648,559,112) | (446,833,123) |
| மொத்த ஒப்புரவுகள் | | 808,011,707 | 808,011,707 |
| **மொத்த ......** | | **189,456,229** | **391,182,216** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| வங்கி கடன் - கடன் தவனை | 21 | 136,642,139 | 174,000,236 |
| ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் | | 191,707,011 | 215,155,555 |
| மொத்த - நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | | **328,349,150** | **389,155,791** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார சென்மதிகள் | 22 | 240,546,047 | 174,435,807 |
| ஏனைய சென்மதிகள் | 23 | 71,885,027 | 46,319,872 |
| குறுகிய கால கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | 24 | 840,717,598 | 770,860,679 |
| பயன்பாட்டுக் கடனின் கீழ் கொள்முதல் | | 46,765,102 | 46,765,102 |
| வங்கி மேலதிகப் பற்று | | 19,702,073 | 51,448,858 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,219,615,847** | **1,089,830,319** |
| **மொத்த ஒப்பரவுகளும் பொறுப்புக்களும்** | | **1,737,421,226** | **1,870,168,327** |

இந்நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைகளுக்கு இணைவாக உள்ளதென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.............................................
எம். ஆர். பீ. ஜயவர்த்தன
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பேற்க வேண்டும். இந்நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளன. பக்கம் 53, 54, 55 ஆகியவற்றிலுள்ள நிதிக் கொள்கைகள், பக்கம் 57, 58 மற்றும் 62 தொடக்கம் 64 வரையிலான படிவங்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளன.

..................................................................
**பீ. பீ. எச். ஜே. ஏ. ரத்னகுமார**
**தவிசாளர்/பணிப்பாளர்**

.........................................................
**ஜு. வீ. நந்தகுமார்**
**பணிப்பாளர்**

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில்
## உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| **16. வேறுபட்ட வரி பொறுப்புக்கள்** | | |
| வருட ஆரம்ப திகதிக்கு | 11,566,933 | 11,268,578 |
| வருடத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட/ தற்காலிக மாற்றங்கள் | 5,538,465 | 298,355 |
| வருட முடிவுத் திகதிக்கு | **17,105,398** | **11,566,933** |
| **17. பொருட்பட்டியல்கள்** | | |
| மூலப்பொருட்கள் | 95,086,893 | 203,092,192 |
| பாவனைப்பொருட்கள் | 9,408,053 | 10,278,420 |
| உதிரிப்பாகங்கள் | 36,733,611 | 37,367,250 |
| கட்டுமானப்பொருட்கள் | 946,267 | 1,202,906 |
| முடிவுப்பொருட்கள் | 72,762,017 | 107,217,687 |
| உற்பத்தியாகும் பொருட்கள் | 56,729,063 | 79,340,955 |
| Good In Transit ( S/P ) | 3,467,774 | |
| | **275,133,678** | **438,499,410** |
| **18. வியாபார பெறுவனவுகள்** | | |
| வியாபார கடன்படுநர் | 434,984,532 | 326,778,134 |
| கழிக்க – அறிவிட முடியாக்கடன் ஏற்பாடு | (33,049,263) | (27,451,460) |
| EPD தரம் குறைவு தண்டம் | (9,028,466) | - |
| ஏற்பாட்டுக்காக ஏனைய கடன்கொடுநர் | 361,309 | 361,309 |
| | **393,268,112** | **299,687,983** |
| **19. ஏனைய பெறுவனவுகள்** | | |
| பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம் (குறிப்பு 19.1) | 8,817,032 | 12,969,692 |
| வைப்புக்கள் மற்றும் பெறுவனவுகள் (குறிப்பு 19.2) | 10,266,188 | 14,613,129 |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்குகள் (குறிப்பு 19.3) | (4,673,971.09) | (2,157,001.08) |
| வங்கி கடன் - தொங்கல் கணக்கு | 14,533,440 | 12,377,566 |
| பெற்றுக்கொள்ளக் கூடிய வரி (VAT முன்.கொ.செ) | - | 8,340,172 |
| | **28,942,689** | **46,143,558** |
| **19.1 பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம்** | | |
| இடர் கடன்கள் | 5,332,274 | 9,788,758 |
| பண்டிகை முற்பணம் | 2,204,000 | 2,378,000 |
| பணியாட்தொகுதி சம்பள முற்பணம் | - | 6,000 |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 1,280,758 | 796,934 |
| | **8,817,032** | **12,969,692** |
| **19.2 வைப்புக்களும் பெறுவனவுகளும்** | | |
| வைப்புக்கள் பெறுவனவுகள் | 9,766,198 | 14,099,073 |
| சேர்க்க. ஏனைய பெறுவனவுகள் | 499,990 | 514,056 |
| | **10,266,188** | **14,613,129** |
| **19.3 விற்பனை கட்டுப்பாட்டு கணக்கு** | | |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்கு | (4,673,971) | (2,157,001) |
| | **(4,673,971)** | **(2,157,001)** |
| **20. காசும் காசுக்கு சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | 30,841,763 | 27,553,571 |
| வழியிடைப்பணம் | 530,716 | 1,893,709 |
| கையிலுள்ள காசு | 86,873 | 58,950 |
| | **31,459,352** | **29,506,231** |

காசுப்பாய்ச்சல், காசும் காசுக்கு சமமானவைகள் கூற்றின் பயன்பாட்டிற்காக பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன.

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு | 30,841,763 | 32,987,997 |
| வழியிடைப்பணம் | 530,716 | 1,893,709 |
| கையிலுள்ள காசு | 86,873 | 58,950 |
| | **31,459,352** | **34,940,656** |
| வங்கி மேலதிகப்பற்று | (19,702,073) | (51,448,858) |
| | **11,757,279** | **(16,508,202)** |
| 21. **வங்கிக் கடன் நீண்ட காலம்** | | |
| 2019. 01. 01 திகதிக்கு ஆரம்ப நிலுவை | 174,000,236 | 185,000,000 |
| வருடத்தினுள் கடளுக்கான செலுத்தல்கள் | (37,358,097) | (10,999,764) |
| வருட முடிவில் மிகுதி | **136,642,139** | **174,000,236** |
| **22. வியாபார கொடுப்பனவுகள்** | | |
| வியாபார கடன் கொடுநர் | 47,478,490 | 42,230,180 |
| ஏனைய கடன்கொடுநர் | 1,805,999 | 1,510,615 |
| உந்நாட்டு இறைவரித்திணைக்களம் | 189,965,706 | 129,399,160 |
| விற்பனை முற்பணம் | 16,194 | 16,194 |
| வேறு கடன்பட்டோர் (கடன் மீதி) | 1,279,658 | 1,279,659 |
| | **240,546,047** | **174,435,807** |
| **23. ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| திரண்ட செலவு | 70,079,065 | 44,848,338 |
| வைப்பு கொடுப்பனவு | 1,805,962 | 1,471,534 |
| | **71,885,027** | **46,319,872** |
| **24. வட்டி தாங்கும் கடன்** | | |
| குறுகிய கால வங்கிக் கடன் | | |
| ஆரம்ப மீதி 01.01.2019 | 770,860,679 | 697,050,043 |
| புதிய கடன் | 1,094,567,698 | 744,249,820 |
| கடன் செலுத்தப்பட்டது | (1,024,710,779) | (670,439,184) |
| இறுதி மீதி 31.12.2019 | **840,717,598** | **770,860,679** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2019<br>ரூ | 2018<br>ரூ |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் காசுப்பாய்ச்சல்** | (169,428,397) | (406,985,154) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/நட்டம் | | |
| செம்மையாக்கலுக்காக: | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | 61,465,802 | 61,107,084 |
| நடைமுறையில்லாத கொத்து விற்பனை இலாபம் | - | - |
| முந்திய வருட செம்மையாக்கல் | (32,297,590) | - |
| நிதிச் செலவினங்கள் | 149,163,926 | 110,486,874 |
| வருடம் முழுவதும் பணிக்கொடை ஏற்பாடு | 6,545,373 | 47,483,284 |
| கல்வி வெளியீட்டு திணைக்களத்து தாமதப் பணம் ஒதுக்குதல் | 9,028,466 | - |
| கைவிடப்பட்ட கடன் | 5,597,804 | 3,466,949 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | **30,075,384** | **(184,440,963)** |
| **தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றம்** | | |
| (அதிகரிப்பு) பொருட் பட்டியல்களில் குறைப்பு | 163,365,732 | (185,787,734) |
| (Increase)/ Decrease in Deffered Tax | (5,538,465) | (298,355) |
| (அதிகரிப்பு) வியாபார பெறுவனவுகளின் குறைப்பு | (108,206,398) | 221,696,364 |
| (அதிகரிப்பு)/ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | 17,049,570 | 1,165,252 |
| அதிகரிப்பு/நடைமுறை பொறுப்புக்களின் (குறைப்பு) | 93,375,394 | 6,189,325 |
| **செயற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்ட காசு** | **190,121,217** | **(141,476,112)** |
| செலுத்திய வரி | (1,700,000) | (298,355) |
| செலுத்திய ஊழியர் ஓய்வு கொடை | (29,993,918) | (21,040,179) |
| **செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** | **158,427,299** | **(162,814,646)** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** | | |
| பி.பி.ஈ கொள்வனவு | - | - |
| பி.பி.ஈ விற்பனை | (13,496,714) | (6,819,302) |
| முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள் | **(13,496,714)** | **(6,819,302)** |
| நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | | |
| கடன்பெறுவனவுகளுக்கான பெறுவனவுகள்/செலுத்துகை | 32,498,822 | 245,663,912 |
| வட்டி சொலுத்தல் | (149,163,926) | (110,486,874) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **(116,665,104)** | **135,177,038** |
| **காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு (குறைப்பு)** | **28,265,481** | **(32,309,951)** |
| **தவணை ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகள்** | **(16,508,202)** | **15,801,749** |
| **தவணை இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகள் (குறிப்பு 19)** | **11,757,279** | **(16,508,202)** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | வெளியிட்ட மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கம் ரூ. | பொது ஒதுக்கம் ரூ. | அபிவிருத்தி ஒதுக்கம் ரூ. | மறு மதிப்பிட்டு ஒதுக்கம் ரூ. | இருப்பு வருமானம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2018 **கணக்கீடு** | | | | | | | |
| **2018 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 808,012,812 | (44,752,462) | **793,263,982** |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | 4,904,493 | **4,904,493** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் வரிக்குபின் | | | | | | (406,985,154) | **(406,985,154)** |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | (1,105) | | **(1,105)** |
| **2018 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **808,011,707** | **(446,833,123)** | **391,182,216** |
| 2019 **கணக்கீடு** | | | | | | | |
| **2019 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 808,011,707 | (446,833,123) | **391,182,216** |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | (32,297,591) | **(32,297,591)** |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் வரிக்குபின் | | | | | | (169,428,397) | **(169,428,397)** |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | | | **0** |
| **2019 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **808,011,707** | **(648,559,112)** | **189,456,228** |

## 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | குறிப்புக்கள் | 2019 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 7 | 1,593,815,189 | 901,053,747 |
| விற்பனை செலவு | 8 | (1,320,149,485) | (903,841,823) |
| மொத்த இலாபம் | | **273,665,704** | **(2,788,076)** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 9 | 20,065,417 | 17,870,270 |
| விநியோக செலவினம் | 10 | (35,307,657) | (16,787,874) |
| நிர்வாக செலவினம் | 11 | (188,662,632) | (234,414,704) |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 12 | (92,281,928) | (62,818,995) |
| செயற்பாட்டு இலாபம் | | (22,521,097) | (298,939,379) |
| நிதி வருமானம் | | 2,256,626 | 2,441,100 |
| நிதி செலவினம் | 13 | (149,163,926) | (110,486,874) |
| வரிக்கு முந்திய இலாபம் | | **(169,428,397)** | **(406,985,154)** |
| வருமான வரி | 14 | - | - |
| வரிக்கு பிந்திய இலாபம் | | **(169,428,397)** | **(406,985,154)** |

## 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | 2019 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|
| ஆண்டுக்குரிய இலாபம் (வரிக்கு பின்) | **(169,428,397)** | **(406,985,154)** |
| ஏனைய விரிவான வருமானம் | **-** | **-** |
| மறு மதிப்பீட்டு இலாபம் | **-** | **(1,105)** |
| ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம் | **(169,428,397)** | **(406,986,259)** |

## 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2019 ரூ. | 2018 ரூ. |
|---|---|---|
| **07. வருமானம்** | | |
| காகிதாதிகள் தொழிற்சாலையின் வருமானம் | 166,442,486 | 221,627,632 |
| பிரதான அச்சக வருமானம் | | |
| பாடப்புத்தகங்கள் | 979,237,857 | 289,029,668 |
| தொழில்கள் | 157,645,499 | 360,241,485 |
| லொத்தர் சீட்டு | 268,941,482 | - |
| வெளியீடு | 2,872,246 | 4,786,835 |
| ஏனைய விற்பனை வருமானம் | 18,675,619 | 25,368,128 |
| | **1,593,815,189** | **901,053,747** |
| **08. விற்பனைச் செலவு** | | |
| பிரதான அச்சகம் | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 629,573,639 | 407,630,135 |
| நேரடி உழைப்பு | 189,321,830 | 187,570,249 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 43,412,565 | 36,149,507 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 88,242,585 | 91,829,708 |
| ஏனைய செலவுகள் | 105,170,522 | (74,060,062) |
| தாமதக் கட்டணம் (தண்டப்பணம்) (க.வெ.தி) | 69,264,953 | 38,262,345 |
| தாமதக் கட்டணம் (தண்டப்பணம்) (தே.லொ.ச.) | 8,481,350 | 10,181,000 |
| (க.வெ.தி.) தாமதக் கட்டணம் ஒதுக்குதல் | 9,028,466 | - |
| காலம் கடந்த பணக்கொடுப்பனவு மற்றும் தண்டம் | | |
| | **1,142,495,910** | **697,562,880** |
| **காகிதாதி தொழிற்சாலை** | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 101,065,522 | 129,481,819 |
| நேரடி உழைப்பு | 30,348,260 | 29,708,956 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 2,391,960 | 3,277,672 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 8,927,598 | 8,710,140 |
| ஏனைய செலவுகள் | 14,819,655 | 9,533,639 |
| | **157,552,995** | **180,712,225** |
| வெளியீட்டு பகுதியின் செலவு | 5,336,363 | 4,237,183 |
| ஏனைய பகுதிகளின் செலவுகள் | 14,764,217 | 21,329,535 |
| மொத்த விற்பனைச் செலவு | **1,320,149,485** | **903,841,823** |
| **09. ஏனைய பராமரிப்பு வருமானம்** | | |
| ஏனைய வருமானங்கள் | 19,010,602 | 17,463,220 |
| கேள்விப்பத்திர வைப்பு | 1,042,015 | 387,850 |
| சிற்றுண்டிச்சாலை மூலம் கிடைத்த இலாபம் | 12,800 | 19,200 |
| | **20,065,417** | **17,870,270** |

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **10. விநியோகச் செலவு** | | |
| தேசிய கட்டிட வரி | 15,450,486 | 7,364,166 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 7,969,075 | - |
| மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு | 4,746,399 | 5,027,606 |
| விளம்பரம் | 518,688 | 254,648 |
| விற்பனை மேம்படுத்தல் | 800,841 | 391,585 |
| அறவிட முடியாக்கடன் ஏற்பாடு | 5,597,804 | 3,466,949 |
| விற்பனைக் கூடம் பராமரிப்பு | - | 2,350 |
| தீக் காப்புறுதி - விற்பனைக் கூடம் | 59,752 | 60,007 |
| விற்பனை கழிவு | 60,009 | - |
| போக்குவரத்துச் செலவு முடிவுப் பொருளுக்கு | 4,258 | 10,750 |
| மீள் செலுத்தப் படாத டென்டர் வைப்பு | 100,345 | 209,813 |
| | **35,307,657** | **16,787,874** |
| **11. நிர்வாக செலவினங்கள்** | | |
| வாடகை | 3,451,975 | 3,482,711 |
| காணி, கட்டிட நிர்வாகம் | 466,112 | 576,623 |
| மின்சாரம் | 133,656 | 178,561 |
| அலுவலக தளபாட பராமரிப்பு | 541,526 | 395,530 |
| தேய்மானம் - அலுவலக தளபாடம் | 1,325,311 | 1,043,964 |
| கணினி மென்பொருள் | 1,928,133 | 1,921,470 |
| மோட்டார் சைக்கிள்கள் | 64,375 | 64,375 |
| வரிப்பணம் | 94,575 | 41,487 |
| நீர் கட்டணம் | 51,566 | 67,813 |
| சம்பளங்களும் படிகளும் | 127,816,664 | 129,973,241 |
| ஊழியர் மேலதிக நேரம் | 8,809,290 | 9,824,898 |
| ஊழியர் சேமலாப நிதி | 16,067,361 | 16,507,035 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 4,016,842 | 4,127,500 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 1,949,750 | 2,115,250 |
| தவிசாளர் ஊதியம் | 447,229 | 598,771 |
| பணிப்பாளர் ஊதியம் | 416,116 | 569,869 |
| பணிப்பாளர் சபை கட்டணங்கள் | 388,450 | 453,500 |
| தபால் செலவு | 232,264 | 255,824 |
| தொலைபேசி | 1,227,298 | 1,580,108 |
| அறிவித்தல் மற்றும் வெளியீடுகளை அச்சிடல் | 2,479,384 | 1,972,015 |
| பத்திரிகை விளம்பரம் மற்றும் வெளியீடுகள் | 1,001,025 | 504,385 |
| போக்குவரத்து | 1,210,284 | 1,191,440 |
| பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் | 116,920 | 270,270 |
| பொது அலுவலக செலவினங்கள் | 214,241 | 163,917 |
| கணக்காய்வு கட்டணம் | 443,573 | 500,000 |
| இதர செலவினங்கள் | 95,255 | 45,988 |
| சட்ட மற்றும் ஆலோசனை சேவை | 80,679 | 18,136 |
| களியாட்டம் | 132,559 | 377,176 |
| பணிக்கொடை செலவினங்கள் | 6,545,373 | 47,483,284 |
| ஊழியர் பயிற்சி | 442,120 | 328,000 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கட்டணம் | 129,000 | 38,250 |
| இணையத்தளம்/மின்னஞ்சல் | 184,670 | 141,886 |
| கேள்வி பத்திர சபை தொழில்நுட்ப கட்டணங்கள் | 600,000 | 2,190,000 |
| மோட்டார் வாகன பராமரிப்பு 25% | 4,746,399 | 5,027,606 |

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| தங்குமிடம் | - | 48,430 |
| பணிப்பாளர் சபை கூட்ட செலவினங்கள் | 28,370 | 32,984 |
| உறுப்பினர் கட்டணங்கள் | 42,000 | 41,310 |
| நன்கொடை | 390,973 | 46,783 |
| கணினி பணியக சேவை கட்டணங்கள் | 256,500 | 144,550 |
| வினியோகத்தர் பதிவுக் கட்டணம் | 94,815 | 69,768 |
| | **188,662,632** | **234,414,704** |
| **12. ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்** | | |
| ஊழியர் சேமநலன் | 21,171,114 | 24,203,913 |
| ஊழியர் மருத்துவ திட்டம் | 9,430,899 | 10,046,219 |
| ஊழியர் போக்குவரத்து | 8,503,040 | 13,615,290 |
| ஊழியர் வெகுமதி | 22,097,071 | 1,408,369 |
| விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு | 15,675,000 | - |
| விடுமுறை கொடுப்பனவு | 13,210,825 | 10,879,168 |
| வீட்டுக்கடன் வட்டி | 2,087,229 | 2,573,035 |
| ஊழியர் விருதுகள் | 106,750 | 93,000 |
| | **92,281,928** | **62,818,995** |
| **13. வருமான செலவினங்கள்** | | |
| வங்கி கட்டணங்கள் | 9,877,393 | 2,349,948 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 6,142,227 | 5,347,406 |
| வங்கி கடன் வட்டி – குறுகிய காலம் | 111,597,091 | 88,917,227 |
| வங்கி கடன் வட்டி – நீண்ட காலம் | 21,547,216 | 13,872,293 |
| | **149,163,926** | **110,486,874** |
| **14. வருமான வரி** | | |
| ஆண்டுக்குரிய வருமான வரி ஏற்பாடு | - | - |
| | - | - |

## 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

15. சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்

| விபரம் | மறுமதிப்பீடு 01. 01. 2018 | ஆண்டின் சேர்த்தல்கள் / மீள்பெறுமதியிடல்கள் | ஆண்டின் வெளியேற்றங்கள் | செலவு மறுமதிப்பீடு 31. 12. 2018 உள்ளவாறு | ஆண்டின் வெளியேற்றங்கள் | மறுமதிப்பீடு 01.01.2019 | சேர்த்தல் மீள்பெறுமதியிடல்கள் 2019 | 31. 12. 2019 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயத்தில்** | | | | | | | | |
| காணி | 378,500,000 | - | - | 378,500,000 | - | 378,500,000 | - | 378,500,000 |
| கட்டிடம் | 166,600,000 | - | - | 166,600,000 | - | 166,600,000 | - | 166,600,000 |
| * தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 530,127,704 | 5,229,372 | - | 535,357,077 | - | 535,357,077 | 10,609,349 | 545,966,426 |
| மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய வாகனங்கள் | 55,563,000 | - | - | 55,563,000 | - | 55,563,000 | - | 55,563,000 |
| ** தொழிற்சாலை கருவிகள் வகைகள் | 9,328,893 | 1,504,940 | - | 10,833,834.00 | - | 10,833,834 | 2,887,365 | 13,721,199 |
| கணினி, பாகங்கள் | 5,700,220 | 84,990 | - | 5,785,210 | - | 5,785,210 | - | 5,785,210 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,951 | - | - | 2,572,951 | - | 2,572,951 | - | 2,572,951 |
| **மொத்தம்** | **1,148,392,769** | **6,819,302** | **-** | **1,155,212,072** | **-** | **1,155,212,072** | **13,496,714** | **1,168,708,786** |
| **சேர்க்கப்பட்ட தேய்மானம்** | | | | | | | | |
| விபரம் | **Revaluations/C for the Year 01.01.2018** | **Annual Depreciation 2018** | **Disposals during the year** | **Accumulated Depreciation 31.12.2018** | **Disposals during the year** | **Revaluations/ Cost 01.01.2019** | **Annual Depreciation 2019** | **Accumulated Depreciation 31.12.2019** |
| கட்டிடம் | 4,165,000 | 4,165,000 | - | 8,330,000 | - | 8,330,000 | 4,165,000 | 12,495,000 |
| தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 25,042,347 | 40,085,900 | } - | 65,128,247 | - | 65,128,247 | 40,156,610 | 105,284,857 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 20,838,125 | 13,890,750 | | 34,728,875 | - | 34,728,875 | 13,890,750 | 48,619,625 |
| அலுவலக தளபாடங்கள் | 676,348 | 1,043,964 | - | 1,720,312 | - | 1,720,312 | 1,325,310 | 3,045,622 |
| கணினி, பாகங்கள் | 1,715,910 | 1,921,470 | - | 3,637,380 | - | 3,637,380 | 1,928,132 | 5,565,512 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,950 | - | } - | 2,572,950 | - | 2,572,950 | - | 2,572,950 |
| **மொத்தம்** | | **61,107,084** | **-** | **116,117,763** | **-** | **116,117,763** | **61,465,802** | **177,583,565** |
| **எழுத்துப் பெறுமதி** | | | | **1,039,094,309** | | | | **991,125,221** |

* / ** revalued under one category during the year

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எம்ஈடீ/டீ/எஸ்பீசீ/1/19/154 2020 ஆகஸ்ட்

தலைவர்,
அரசாங்க அச்சக கூட்டுத்தாபனம்.

அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 79 (ஆ) பந்தியின் பிரகாரம், மூலதனத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒதுக்கத்தின் தன்மை, அதை பராமரிக்கும் நோக்கம் போன்றவற்றை வெளிப்படுத்த வேண்டியது கட்டாயமான போதிலும், கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டுவருகின்ற ரூபா 102,491 ஆன மூலதன ஒதுக்கம் ரூபா 1,000,000 ஆன பொது ஒதுக்கம் மற்றும் ரூபா 13,901,142 ஆன அபிவிருத்தி ஒதுக்கம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 81(இ) பந்தியின் பிரகாரம் வரிச் செலவுகள் (வருமானங்கள்) மற்றும் கணக்கீட்டு இலாபத்திற்கிடையிலான தொடர்பை தெளிவுபடுத்தும் முகமாக எண்ணிக்கையிலான இணக்கப்பாடொன்று ஒழுங்குபடுத்தப்பட வேண்டுமென்பதுடன்,

அதற்குரிய வரி விகிதமும் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்றாலும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களிலும் அவ்வாறான வெளிப்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் பிரதான அச்சகத்தின் மற்றும் காகிதாகிகள் தொழிற்சாலையின் மூலப் பொருட்களை கொள்வனவு செய்யும் பெறுமதிகள், கிரயப் பிரிவின் அறிக்கையின் படி ரூபா 614,714,346 ஆக காணப்பட்ட போதும் நிதிக்கூற்றுக்களின்படி அது ரூபா 622,633,861 ஆக குறிப்பிடப்பட்டதனால், உற்பத்திக் கிரயம் ரூபா 7,919,515 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிலே கூட்டுத்தாபனத்தின் பிரதான அச்சகத்தின் மற்றும் காகிதாகிகள் தொழிற்சாலையின் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் கிரயம், கிரய அறிக்கையின் படி ரூபா 722,757,688 ஆக காணப்பட்ட போதும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 730,639,160 ஆக குறிப்பிடப்பட்டிருந்தனால் உற்பத்திக் கிரயம் ரூபா 7,881,472 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் மூலப்பொருட்கள் கொள்வனவுகளின் கீழான மொத்தம் ரூபா 1,034,813 ஆன பெறுமதி சேர்வரி சீராக்கப்பட்டமையின் காரணத்தால், மீளாய்வாண்டிற்கான கொள்வனவுகள் அந்த பெறுமதியில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் மூலப்பொருள் கொள்வனவுகளுக்குரிய மொத்த பெறுமதி ரூபா 4,788,039 ஆன தேசிய பிரதிநிதித்துவ தரகுச் செலவுகள் கணக்குவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்குள் உள்ளடங்கியுள்ள ரூபா 17,105,398 ஆன பிற்போடப்பட்ட வரி மீதி உறுதிப்படுத்தலுக்காக கணக்கிடுதல் உள்ளடங்களாக விபரமான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) அரச அச்சக திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட மீதியை உறுதிப்படுத்தலின் படி திணைக்களத்திற்கு ரூபா 8,324,416 அறவிடப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், நிதிக்கூற்றின் பிரகாரம் அது ரூபா 4,012,020 ஆக இருந்ததால் ரூபா 4,312,396 வேறுபாடு காணப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் தேசிய கடதாசி கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 9,753,427 பெறப்பட வேண்டியிருந்ததுடன் கூட்டுத்தாபனத்தினால் கடதாசி கம்பனிக்கு செலுத்த வேண்டிய பணம் ரூபா 7,460,675 ஆக காணப்பட்டது. இந்த மீதிகளுக்குள் 06 வருடங்கள் கடந்த கடன் தொகை முறையே ரூபா 7,989,976 மற்றும் ரூபா 5,578,142 ஆக இருந்தும் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைக்குட்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

  - 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு பேரவையால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருந்தன.

  - 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

  - 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ட)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.2(ஏ) பந்தி நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

  பின்பற்றப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு புறம்பான கூட்டுத்தாபனத்தினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் கூட்டுத்தா ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதாக.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புகளை தவிர, பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் பேரவை இணங்கியொழுகாதுள்ளமையை.

| சட்டங்கள், விதிகளுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2015 மே 25 ஆம் திகதிய PED 1/2015 ஆம் இலக்க அரச வியாபார திணைக்கள சுற்றறிக்கையின் 4.2 ஆம் பந்தி | 17 இடைமட்ட முகாமையாளர்களுக்காக குழு போக்குவரத்துச் சேவையை விநியோகிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளாமல் அதற்கு பதிலாக ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 17,500 வீதம் மீளாய்வாண்டிலே மொத்தம் ரூபா 3,284,798 கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2018 திசெம்பர் 07 ஆம் திகதிய PED 03/2018 ஆம் இலக்க பொது வியாபார சுற்றுநிருபம். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்த முடியுமான ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் தொகை ரூபா 1,716,000 ஆக இருந்த போதும், மொத்தம் ரூபா 22,097,071 கொடுப்பனவிற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பேரவை அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்காத வகையில் செயலாற்றியுள்ளமை.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காமை.

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) 05 வருடங்கள் மற்றும் அதற்கு மேலதிகமான ரூபா 170,893,188 கூட்டுத்தாகையான வியாபார கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட முழு கடன்பட்டோரில் 39 சதவீதம் ஆகும்.

(ஆ) பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடுதல் மற்றும் லொத்தர் சீட்டுக்களை அச்சிடுதலுக்காக முறையே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடமிருந்து மற்றும் தேசிய லொத்தர் சபையிடமிருந்து ரூபா 979,237,857 மற்றும் ரூபா 268,941,482 ஆக மொத்தம் ரூபா 1,248,179,339 வருமானமொன்று கிடைக்கப் பெற்றிருந்தது. இது வருடத்தின் மொத்த வருமானமான ரூபா 1.593,815,189 இன் 78 சதவீதமாக இருந்ததுடன், கூட்டுத்தாபனம் அதன் வருமான மூலகங்கள் வெவ்வேறு வகைப்படுத்தப்படாமல் இரண்டு வருமான மூலகங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2020 ஆம் ஆண்டிற்கான பாடசாலைப் பாட புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதற்கான கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு முரணாக 02 முதல் 70 நாட்கள் வரையான காலதாமதித்தின் பின்னர் அச்சிடப்பட்ட பாடசாலை பாடப்புத்தகங்கள் கையளித்தல் காரணமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பணத்திலிருந்து ரூபா 69,317,151 தாமதக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அச்சக நடவடிக்கைகளுக்காக நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற 05 இடைமட்ட முகாமையாளர்கள், கனிஷ்ட தரத்திலான 12 பேர், விற்பனை நிலையத்திற்கு பொறுப்பான 08 உத்தியோகத்தர்கள் மற்றும் 78 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 107 நபர்களின் பதவிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக வெற்றிடமாக காணப்பட்டன.

டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2019

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

1. **நிதி அறிக்கைகள்**

1.1. **புள்ளிவிபர அடிப்படையிலான கருத்து**

புள்ளிவிபர அடிப்படையிலான கருத்து தொடர்பாக அடிப்படையான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படும்.

1.2. **புள்ளிவிபர அடிப்படையிலான கருத்திற்கான அடிப்படைக் காரணிகள்**

அ) கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த ஒதுக்கம் அமைக்கப்பட்டிருந்ததுடன் இறுதி கணக்குகளில் இல. 4.3.1 இன் கீழ் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆ) மதிப்பாய்வு செய்த ஆண்டு மற்றும் கடந்த சில வருடங்களாக கூட்டுத்தாபனம் நட்ட நிலைமையை சம்பாதித்தமையால் வருமான வரி பெறுமதி பூச்சியமானமை, அத்துடன் வரி செலுத்துவதற்கான வரி வருமான நிலைமை இல்லை என்பதனால் வரி ஆதாயத்தினைக் கணக்கிட்டு ஒப்பிடப்பட்டு முன்வைக்கப்பட முடியவில்லை.

இ) இது கூட்டுத்தாபனக் கணக்கு நடவடிக்கைகள் கையால் (manual) மேற்கொள்கின்றமையால் ஏற்பட்ட வேறுபாடே தவிர கணக்கியல் பிழை அல்ல. முன்பிருந்தே கூட்டுத்தாபன நிதி அறிக்கைகளில் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யும் செலவினை தயாரிப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் அடிப்படையாக கொள்ளப்படுவது செலவுப் பிரிவின் அறிக்கைகள் மாத்திரம் அல்லாததுடன்,மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யும் போது அதற்காக மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவுகள் மற்றும் அதற்கான திரட்டப்பட்ட கட்டணம் காணப்படின் அது நிதிப்பிரிவினால் புதுப்பிக்கப்பட்டு மூலப்பொருட் கொள்வனவு கணக்கிற்கு சரிசெய்யப்படும். அது இறுதி கணக்கிற்காகவும் பொருந்தும்.

செலவுப் பிரிவிற்குகொள்வனவாக கருதப்படும் சர்வதேச கொள்வனவுக்குரிய சில சிறு கொடுப்பனவுகள் மற்றும் கட்டணங்கள் பல காலம் கடந்து இனம் காணப்படுகின்றமையாலும் அச் சந்தர்ப்பமாகும் போதும் அம் மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு உபயோக செலவாக காட்டப்பட்டிருக்கின்றமையாலும் அவற்றினை வெவ்வேறாக இனம் கண்டு சீர் செய்வது நடைமுறைச் சிக்கலொன்றாக காணப்படுகின்றது. எனவே செலவுப் பிரிவின்மூலப்பொருட் கொள்வனவு அறிக்கை கூட்டுத்தாபன நிதி அறிக்கையை தயாரிப்பதற்காக அடிப்படையாகக் கொள்ளாது,சீர் செய்யப்பட்ட கணக்கீட்டுப் பிரிவின் மூலப்பொருட் கொள்வனவு செலவு அதற்காக அடிப்படைக் காரணியாக கொள்ளப்படும்.

மதிப்பாய்வு செய்யப்பட்ட கணக்காண்டில் கூட்டுத்தாபனத்தினால் 730 மில்லியன் ரூபா அளவு பாரிய பெறுமதியுடைய மூலப்பொருள் வருடம் முழுவதும் பல சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்பட்டிருப்பதனால் அவற்றின் சில சிறிய கொடுப்பனவுகள் மற்றும் கட்டணங்கள் செலவுப் பிரிவின் கொள்வனவுகளில் உள்வாங்கப்படாத சந்தர்ப்பங்களையும் காணமுடியும். ஏனெனில் செலவுப் பிரிவினால் உரிய மூலப்பொருள் கொள்வனவில் செலவு தயாரிக்கப்படுவது வழங்கல் பிரிவினால் அவர்களுக்கு வழங்கப்படும் செலவுப் படிவத்தை (cost sheet) அடிப்படையாகக் கொண்டதாகும். அதற்குள் சில சந்தர்ப்பங்களில் மூலப்பொருட்கள் கொண்டுவரும் கட்டணங்கள், வரி அளவு மாற்றங்கள், காப்புறுதிக் கட்டணம், எழுத்தர் கட்டணம், வங்கிக் கட்டணங்கள் போன்ற செலவுகள் ஏற்றுக்கூலி மற்றும் இறக்குக்கூலி, கொள்கலன் கட்டணங்கள் போன்ற சில சில கட்டணங்கள் தவறவிடப்பட்டதைக் காண முடியும். அவ்வாறேசெலுத்தப்பட்ட கட்டணங்கள் மீண்டும் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்களையும் அவதானிக்க முடிந்தது. உதாரணமாக கொள்கலன் கட்டணங்களைக்

குறிப்பிட முடியும். எனினும் கணக்கீட்டுப் பிரிவில் உரிய அனைத்துக் கொடுப்பனவுகள் சமப்படுவதினால் வருட இறுதியில் அவற்றிற்குரிய திரட்டப்பட்ட கொடுப்பனவுகள் இருப்பின் அவையும் உள்வாங்கப்பட்டு மூலப்பொருள் கொள்வனவின் செலவு தயாரிக்கப்படுகின்றமையினால், அது இறுதிக் கணக்கிற்காக சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. செலவுப் பிரிவினால்சர்வதேச வியாபாரத்திற்குரிய தவறவிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை உடனடியாக வழங்குவதென்பது நடைமுறையில் சிரமமாகும். (உரிய செலவு நடைபெறும்போது சில மாதங்கள் கடந்திருப்பதனாலும் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதனாலுமாகும்).

கூட்டுத்தாபனத்தின் மூலப்பொருள் உபயோகத்தினைக் கணக்கிடுவதற்காக மட்டும் நிறுவனத்தில் கணினி மயப்படுத்தப்பட்ட தனியான முறை இல்லாமையினால் மூலப்பொருள் கொள்வனவு செலவு தயாரிக்கப்படுகின்றது. இதன்போது இச் சகல செலவுகளும் உள்ளடங்கப்பட்டு அச் செலவுகள் செலவுப் பிரிவினால் தயாரிக்கப்படினும் மேற்குறிப்பிட்ட வகையில் வெளிநாட்டுக் கணக்குகளில் சில சில செலவுகள் உள்வாங்கப்படுவது தவறவிடப்பட்டுள்ளது. எனினும் கணக்கீட்டுப் பிரிவின்மூலப்பொருட் கொள்வனவுக் கணக்குகளில் செலவு சரியாகக் கணக்கிடப்படுகின்றமையால் அது இறுதிக் கணக்குகளில்உள்வாங்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த வகையில் செலவுப் பிரிவில் மூலப்பொருட் கொள்வனவு செலவின் பெறுமதியில் குறைவாகக் கணக்கிடப்படுகின்றமையால் செலவுப் பிரிவின் மூலப்பொருள் உபயோகங்களின் பெறுமதியிலும் (அனைத்தும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றமையால்) அதனுடன் சமப்படாது குறைவான பெறுமதி காணப்படுகின்றது. எனவே உபயோகிக்கப்பட்ட செலவுகளையும் செலவுப் பிரிவின்செலவு அறிக்கைகளில் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இறுதிக் கணக்குகளில் அது சரியான பெறுமதியாக சரி செய்யப்பட்டுள்ளது. (கணக்கீட்டுப் பிரிவின்மூலப்பொருட் கொள்வனவு,செலவுப் பிரிவின் செலவினை விட மதிப்பாய்வு வருடத்தில் ரூ. 7,919,513.01 பெறுமதியினைக் காண முடியும்). எனவே உபயோகிக்கப்பட்ட மூலப்பொருட்களின் பெறுமதி ரூ. 7,881,472 இனால் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதுவும் இறுதிக் கணக்குகளில் சரியாக சமப்படுத்தப்பட்டுள்ளது. இந்த (ஆ) விசாரணையில் முழு விளைவினை சமப்படுத்தும் போது அதன் பெறுமதிரூ. 38,043 ஆகும்.அப்படியாயின் மூலப்பொருள் உற்பத்தி செலவின் 0.48மூ ஆகும்.

களஞ்சியத்தின் கொள்கலன் அட்டைப் படிவத்தை (bin card) ஒப்பிடும் போது மூலப்பொருள் இருப்பு கட்டுப்பாட்டிற்காக செலவுப் பிரிவில் பேணும் பேரேடு மற்றும் கணக்கீட்டுப் பிரிவின்கணக்குப் பேரேடு இடையே இவ்வாறான வேறுபாடுகள் காணப்படுதல் நடைமுறை விடயம் என்பதுடன் மூலப்பொருள் உபயோகத்தினை நிதிக் கணக்குகளில் உள்வாங்குதல் இதன் பிரதான செயற்பாடாகும்.

நிறுவனத்தின் இறுதி இருப்பினை பௌதிகமாக கணக்கிட்டு (உள்வாங்கப்படாத செலவுகள் காணப்படின் அவற்றினையும் உள்வாங்கி) தேறிய உணரக்கூடிய பெறுமதி (NRV) செலவு கணக்கிடப்படுகின்றமையினால் கணக்கியல் ரீதியாக இலாபத்தில் எவ்வித தாக்கமும் செலுத்தாது உண்மைப் பெறுமதிக்கு சமப்பட்டுள்ளது. நிறுவனம் இன்னமும் கொடுக்கல் வாங்கல்களை கணினி மயப்படுத்தாமையினால் இதற்கு வேறு பொருத்தமான மாற்று வழியினை உபயோகிப்பது நடைமுறையில் கடினமாக உள்ளது. இக் காரணங்களாலேயே ERP கணினி அமைப்பினைக் கொள்வனவு செய்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் அது தற்போது ஆரம்பக்கட்டத்தில் காணப்படுகின்றது.

இ) இதுவங்கி குறைப்புக் குறிப்பு (Debit Note No 190043) உள்ளூர் கடன் கடிதங்களின் (Local LC) கீழ் மேற்கொள்ளப்பட்ட 2018 மற்றும் 2019 வருடத்திற்குரிய கொடுப்பனவாகும். ஆதன் பண மதிப்புரூ. 37,738,580.10 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்வனவு செய்த மூலப்பொருள் 2018 வருடத்திற்குரியது ரூ. 29,812,160 ஆவதுடன் மிகுதி ரூ. 7,926,419.29 தொகை மதிப்பாய்வு வருடத்திற்குரியதாகும். எனினும் இவ் வரி விலைப்பட்டியல் (Tax Invoice) 2019 ஆம் ஆண்டில் வழங்கப்படாதிருந்தமையினால் அது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உள்ளீட்டு வரியாக (Input Tax) கோரிக்கை விண்ணப்பம் செய்வதற்கு (Claim) முடியாமையினால் உரிய முழுத் தொகையும் மூலப்பொருள்கொள்வனவுக்கான செலவாக எடுக்கப்பட்டுள்ளது.

ஈ) இதன்போது உரிய மூலப்பொருள்கொள்வனவுக்கான கழிவின் பெறுமதிமூலப்பொருள் கொள்வனவுக்கான கணக்கில் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை சீர் செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உ) இது முன்னைய வருடங்களில் முன்கொண்டுவரப்பட்ட நிலையுடன் உருவாகிய மீதி என்பதனால் அதற்காக வரி கணக்கிடுதல் ஆவணம் புதுப்பிக்கப்படவில்லை என்பதுடன் எம்மிடையே காணப்படும் அறிவும் மட்டுப்படுத்தப்பட்டளவில் உள்ளமையால் அதனை முன்வைப்பதற்கு இயலாது போனதுடன், எதிர்காலத்தில் அது சீர் செய்யப்பட்டு முன்வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஊ) இவ் வித்தியாசத்திற்கான காரணம் கணக்கீட்டுப் பிரிவின் தவறு அல்லாது உற்பத்திப் பிரிவின் நேரடியாக அரசாங்க அச்சுத் திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் செலவாகும். இதனைத் திருத்துவதற்காக பணிப்பாளர் சபைக்கு முன்வைக்கப்பட்டு தழுவு அங்கீகாரம் பெற்ற பின் கணக்கீட்டுப் பிரிவின் பதிவுப் புத்தகங்கள் எதிர்காலத்தில் திருத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எ) தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் 6 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவையினை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியாது. எனினும்சொத்துகளை பொறுப்புகளுக்கு ஈடு செய்து தேறிய இருப்பை மாத்திரம் புத்தகங்களில் காட்டுவது நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ள முடியாது.

## 2. வேறுசட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை

விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கான குறிப்பு

அ) அரச வர்த்தகத் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. PED 1/2015 இன் பிரகாரம் உத்தியோகத்தர்கள் போக்குவரத்து தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அமைய இடைநிலை முகாமையாளர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்குவதில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைப்படி குழு (சேர்வை) வாகனங்களை உபயோகித்து போக்குவரத்து வசதி அதிகபட்சம் 100 கி.மீ செல்வதற்கும்வருவதற்கும் வழங்க முடியும். அதன் பிரகாரம்கூட்டுத்தாபனத்தின் அலுவலகப் பிரிவில் இடைநிலை முகாமையாளர்கள் 18 பேருக்கு குழுப் போக்குவரத்து வசதிகள் வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக 2016.08.08 ஆம் திகதி இல. 769 இலக்கத்தின் கீழ் போக்குவரத்துப் பிரச்சனைகள், வாகனங்களில் காணப்படும் பிரச்சனை நிலைமைகள் மற்றும் அதற்கான செலவுகளைக் குறிப்பிட்டு போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவு ஒன்றினைப் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையிடம் சபைப் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டது.

தற்போதுகூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் போக்குவரத்திற்காக புதிய வாகனமொன்றைக் கொள்வனவு செய்வது அல்லது வெளியில் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளும் நிலைமை இல்லாமையால் செலவு நன்மைகனைக் கருத்திற் கொண்டு உத்தியோகத்தர்கள் தங்களுடைய மோட்டார் வண்டி மற்றும் போக்குவரத்து ஊடகத்தினை உபயோகிப்பதற்காக இக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ் உத்தியோகத்தர்களுக்கு எச் சந்தர்ப்பத்திலும் கடமைக்கு சமூகமளிப்பதற்கு கூட்டுத்தாபனத்தின்வாகனங்களைஉபயோகிப்பதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

ஆ) அடிப்படையில் ஊழியர்களின் ஊக்குவிப்பு, அவர்களின் கோரிக்கைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அதிக உற்பத்தித் திறனை எதிர்பார்த்து முன்னைய வருடங்களுடன் தொடர்புபட்டு அத்துடன் ஒரு மாத மாதாந்த ஊதியத்தை மாத்திரம் ஊக்குவிப்பு கொடுப்பனவாக அமைச்சின் அனுமதியுடன் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவரால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தற்போதைய தலைவரினால் இவ்வருட உற்பத்தித் திட்டம்,உற்பத்தி இலக்கு, சந்தைப் பல்வகையாக்க நடவடிக்கை ஒழுங்கு என்பனவற்றினூடாக சந்தைப்படுத்தல் இலக்கினை இலகுவாக அடைவதற்காக அனைத்து ஊழியர்களையும் ஊக்குவிப்பதற்காக முக்கிய குறிக்கோளாக மேற்கொள்ளப்பட்டது.

3. வேறு கணக்காய்வு அவதானிப்புகள்

அ) 5 வருடம் மற்றும் அதற்கு அதிகமான தொகையான ரூ. 170,893,188 வியாபார கடன்பட்டோர் கடன் நிலுவையினை அறவிடுவதற்காக கூட்டுத்தாபனத்தில் தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2020.03.31 ஆம் திகதிக்கு மீதியாகவுள்ள வியாபாரக் கடன் தொகை ரூ. 88,969,642.10 வரை குறைந்துள்ளது.

அவ்வாறே சங்கராஜ வீதி விற்பனை நிலையத்திற்குரிய 127 வாடிக்கையாளர்களுக்கான கோப்புகள் தயாரித்தல், பரிசீலனை செய்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கம்பஹா விற்பனை நிலையத்தின் கடன்பட்டோர் தொடர்பாகவும் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிடையில் முதுங்கொடை ராஜித புத்தக நிலையம், மெலீ இண்டஸ்ட்ரீஸ் போன்ற வாடிக்கையாளர்கள் மற்றும் அநுராதபுரம் விற்பனை நிலையத்திற்குரிய ஐ.ஜி.ஏ. பண்டார மற்றும் யஷி எண்டர்பிரைசஸ் ஆகிய கடனாளிகள் மரணமடைந்தமைக்கான தகவல் கிடைக்கப் பெற்றுள்ளமையால் எதிர்கால நடவடிக்கைகள் சிக்கலான விடயமாகியுள்ளது. உதவி சட்ட முகாமையாளரின் தலையீட்டின் கீழ் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின் கடன்பட்டோர் இருவர் பகுதியாக பணம் செலுத்தியுள்ளனர்.

அவ்வாறே 2009 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய சில வியாபாரக் கடன்களை அறவீடு செய்வது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் தேவையான குறைந்தபட்ச எழுத்துமூலமான சாட்சிகள் அல்லது சான்றுகள் வழங்கப்பட முடியாதுள்ளது.

ஆ) பாடசாலைப் பாடப் புத்தகங்கள் அச்சிடல் மற்றும் லொத்தர் சீட்டு அச்சிடல் முறையே ரூ. 979,237,857 மற்றும் ரூ. 268,941,482 ஆக முழுத்தொகை ரூ. 1,248,179,339 ஆக காட்டப்பட்டுள்ளது.

மேலும் வருமான வழிவகைகளைப் பல்வகைப்படுத்தாது இரு வருமான வழிவகைகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டிருந்தாலும் இதனைத் தவிர காகிதாதிகள் பிரிவின் வருடாந்த உற்பத்தி வருமானம் ரூ. 187,034,772. இது கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வர்த்தக அச்சிடல் வருமானம் ரூ. 182,290,747.36 தொகையும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்பட்ட ஆசிரியர் கைநூல் அச்சிடல் மூலம் ரூ. 20,959,304.79 வருமானம் கிடைக்கப்பெற்றிருந்தது.

இ) 2020ஆம் வருடத்திற்காக பாடசாலைப் பாடநூல்கள் அச்சிடுவதற்காக மூலப்பொருட்கள் உரிய நேரத்தில் எதிர்பார்த்த காலப்பகுதியில் கிடைக்காமை காரணமாக உற்பத்தி இலக்கினை அடைவதற்கு முடியாமையினால் எதிர்பார்த்த திகதியை விட2 தொடக்கம் 70 நாட்கள் வரையான தாமதம் ஏற்பட்டது.

ஈ) 2020ஆம் வருடத்தின் முதலாம் காலாண்டு முதல் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டிருந்த வெற்றிடங்களைப் பூரணப்படுத்தும் நடவடிக்கைகள் பிற்போடப்பட்டது. அவ்வாறே ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காரணமாக ஆட்சேர்ப்பு பிற்போடப்பட்டதுடன் 2020 டிசம்பர் மாதம் 1ஆம் திகதி முதல் நேர்முகத் தேர்வு நடாத்தப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது.

2021 இன் முதல் 3 மாதங்களில் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்காக திட்டமிடல் நிறைவு பெற்றுள்ளது.

# ANNUAL REPORT